***Tamilmanam International Research Journal of Tamil Studies***
*An international, peer-reviewed monthly academic research journal*

**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

Peer-Reviewed · Open Access · Crossref · Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) · Multidisciplinary

: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026, p372-381** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# பண்டைத் தமிழ்ப் பனுவல்களில் வாழ்க்கை அறிவியல்

*Life Sciences in Ancient Tamil Texts*

**முனைவர் எ. பச்சையப்பன்,**

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 600 030*

*மின்னஞ்சல்: epachaiyappan.tamil@gmail.com | கைப்பேசி: 7812037141*

**Dr. E. Pachaiyappan*,**

*Assistant Professor, Department of Tamil, Pachaiyappa's College, Chennai - 600 030*

*Email: epachaiyappan.tamil@gmail.com | Mobile: 7812037141*

***Article history***

Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email:
*epachaiyappan.tamil@gmail.com*

**Abstract:**

Although the origin of this world cannot be asserted with certainty, the manner of investigating its operational system is known as science. The perspective of operating through the realization of cause-and-effect relationships is the scientific viewpoint. Viewed from this perspective, the ideas presented about nature, the body-life relationship, sensory development, and culture in Sangam literature, such as Tolkappiyam and Purananuru, are scientific in nature.

This paper analyzes the scientific outlook held by the ancient Tamils through the five elements theory, the evolutionary theory of living beings from one-sensed to six-sensed organisms, and the analogy between the human body and nature. This article attempts to establish that such an ancient Tamil perspective is applicable to contemporary human life and serves as a relevant living ethic.

**Keywords:** *: Science, Five Elements, Tolkappiyam, Purananuru, Six-Sense Theory, Culture, Civilization, Cause-and-Effect.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**சுருக்கம் (Abstract)**

இவ்வுலகின் தோற்றத்தை அறுதியிட்டுக் கூற இயலாவிடினும், அதன் இயக்க முறைமையை ஆராய்ந்தறியும் பாங்கே அறிவியல் எனப்படுகிறது. காரண-காரியத் தொடர்பை உணர்ந்து செயல்படும் பார்வையே அறிவியல் நோக்கு ஆகும். இந்நோக்கில் நோக்கும்போது, தொல்காப்பியம், புறநானூறு முதலிய சங்க கால இலக்கியங்களில் இயற்கை, உடல்-உயிர் தொடர்பு, புலனறிவு வளர்ச்சி, பண்பாடு ஆகியன குறித்து முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் அறிவியல் தன்மை வாய்ந்தனவாக அமைந்துள்ளன. ஐம்பெரும்பூதக் கொள்கை, ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரினப் படிநிலைக் கொள்கை, மனித உடலுக்கும் இயற்கைக்கும் இடையேயான ஒப்புமை ஆகியவற்றின் வழி பண்டைத் தமிழர் கொண்டிருந்த அறிவியல் பார்வை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. இத்தகைய பண்டைத் தமிழ்ப் பார்வையானது இன்றைய மானுட வாழ்விற்கும் பொருந்தக்கூடியதாக, பொருத்தமான வாழ்வியல் நெறியாக அமைகிறது என்பதை இக்கட்டுரை நிறுவ முற்படுகிறது.

*திறவுச்சொற்கள்: அறிவியல், ஐம்பெரும்பூதம், தொல்காப்பியம், புறநானூறு, ஆறறிவுக் கொள்கை, பண்பாடு, நாகரிகம், காரண-காரியம்.*

## 1. முன்னுரை

இவ்வுலகு என்று தோன்றியது என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லையாயினும் அதன் இயக்க முறைமையை அறிய இயலுகின்றது. இந்தப் பிரபஞ்சம் குறிப்பிட்ட இயக்க முறைமையைக் கொண்டு இலங்குகின்றது. எல்லையில்லாப் பெருவெளியாகிய விண்ணிலிருந்து நானிலம் தோன்றி அதில் ஓர் அறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரினங்கள் மலர்ந்துள்ளன என்பதைச் சான்றோர் பெருமக்கள் காலந்தோறும் அறிந்தவண்ணம் இயம்புவதை அறிய முடிகிறது. மானுட சமுதாயம் நலத்தோடும் வளத்தோடும் வாழ்வதற்குத் தன்னைப் பற்றிய, தான் வாழும் இவ்வுலகு பற்றிய தெளிவு அவசியமாகிறது. உலகில் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கும். காரியத்தைக் காரணத்தோடு இணைத்து வெளிப்படுத்தினால் அதை அறிவியல் எனலாம். அத்தகைய அறிவியல் கண்ணோட்டம் என்பது தனிமனித வாழ்வுக்கும் சமுதாய வாழ்விற்கும் தேவையானதாக இருக்கிறது.

இக்கட்டுரையானது, அறிவியல் கண்ணோட்டம் மனித வாழ்வில் எவ்வகையில் எவ்வாறெல்லாம் தேவையாகிறது என்பதை விளக்குவதை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இதற்குரிய விரிவை, தொல்காப்பியம், புறநானூறு உள்ளிட்ட பண்டைத் தமிழ்ப் பனுவல்களைத் துணையாகக் கொண்டு இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

| Copyright © Author(s)

**2. அறிவியல்: வரையறையும் தேவையும்**

எந்தவொன்றையும் காரண-காரியத் தொடர்போடு விளக்கும் ஒரு பிரிவே அறிவியல் எனலாம். மானுட வாழ்வில் நிகழும் நிகழ்வுகளை எல்லாம், நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உணர்ச்சிக்கும் விருப்பு-வெறுப்புக்கும் இடம் அளிக்காமல் காரண-காரியத் தொடர்போடு அறியப் பழகினால் எல்லோருக்கும் எப்போதும் நன்மையே பயக்கும் எனலாம். இத்தகைய பகுத்தறிவு நோக்கே பண்டைத் தமிழ்ச் சான்றோர் பனுவல்களிலும் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

**3. இயற்கையும் உயிர்களும்: ஐம்பெரும்பூதக் கொள்கை**

இயற்கையின் படைப்பே இவ்வுலகம் ஆகும். மானுட உருவாக்கமாக அன்றி அதுவாக ஆகுவதெல்லாம் இயற்கையாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பௌதிகங்களும், ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலுள்ள உயிரினங்கள் எல்லாம் இயற்கையின் படைப்பே ஆகும். இக்கருத்தை உலகின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் பின்வருமாறு பதிவு செய்கிறது:

*“நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”*

*(தொல்காப்பியம், மரபியல் 90)*

சங்கப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர், இதே கருத்தினைப் புறநானூற்றில் மற்றுமொரு வகையில் மொழிகிறார்:

*“மண் திணிந்த நிலனும் நிலம் ஏந்திய விசும்பும் விசும்பு தைவரு வளியும் வளித்*
*தலைஇய தீயும் தீ முரணிய நீரும், என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை”*

*(புறநானூறு 2)*

நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்றவாறு தொல்காப்பியரும் முடிநாகராயரும் குறிப்பிடும் வரிசை முறை, ஒவ்வொரு பூதமும் அடுத்த பூதத்திற்குத் தாங்குகோலாக அமையும் தொடர் இயக்கத்தை உணர்த்துவதாகச் சிந்திக்கத்தக்கதாக உள்ளது. இது இயற்கை நிகழ்வுகளைக் காரண-காரிய அடிப்படையில் அணுகும் ஓர் அறிவியல் பார்வையாகவே கருதத்தக்கது.

**4. உடலும் உயிரும்: ஐம்பூத ஒப்புமை**

கோள்களின் இயக்கம் குறிப்பிட்ட முறைமையில் அமைவதுபோல உலக உயிர்களும் உடல் இயக்கங்களும் குறிப்பிட்ட முறைமையில் அமைவதை அறியலாம். நானிலத்திற்கு எல்லை அமைந்து, விண்ணிற்கு அளக்கவியலா எல்லை அமைந்திருப்பதைப் போல, உடலின் இயக்கத்தை ஒருவாறு வரையறைத்துக் கூற இயலுகிறதே அன்றி உயிரின் போக்கை அந்தளவிற்கு

| Copyright © Author(s)

வரையறுத்துக் கூறுவதென்பது அரிதாக இருக்கிறது. இயற்கையையொட்டியே மானுட உடல் அமைந்துள்ளதைப் பின்வரும் உருவப்படத்தில் காணலாம்:




| வ. எண் | ஐம்பூதங்கள் | உடல் |
|---|---|---|
| 1 | நிலம் | மெய் (எலும்பு, சதை) |
| 2 | வானம் (விசும்பு) | உயிர் |
| 3 | காற்று | மூச்சு |
| 4 | தீ | உடல் வெப்பநிலை |
| 5 | நீர் | இரத்தம், சிறுநீர் |

**படம் 1. ஐம்பெரும்பூதங்களுக்கும் மனித உடலுக்கும் இடையேயான ஒப்புமை**

இவ்வாறு ஐந்து பௌதிகங்களையும் ஐம்புலன்களோடு பொருத்திப் பார்க்கும் நிலையும் உண்டு. நிலத்திலுள்ள கல், மண் போன்று உடலில் எலும்பும் சதையும்; காற்றாக மூச்சுக்காற்றும்; தீயாக உடல் வெப்பநிலையும்; நீராக உடலில் இரத்தமும் சிறுநீரும் அமைந்திருக்க, அந்த வானமே உடலில் உயிராக அமைந்திருப்பதை அறிய முடிகிறது. உடலில் காற்று, தீ, நீர் என்ற மூன்றும் அளவோடு அமைதல் வேண்டும். அவை மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் செய்யும் என்பதை

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.29**

அறிவோம்.

மானுட இயல்பையும் உலக இயல்பையும் அறிய முயல்கையில் உடல், உயிர் என்று இரண்டு நிலையில் பகுத்தறிந்தால் அறிதற்கு ஏதுவாக இருக்கும். நிலமானது மண்ணால் ஆகியிருக்கிறது. நிலமும் வானமும் என்று அடிப்படைப் பகுப்பு இரண்டாக அமைந்து அதையொட்டியே காற்று, தீ, நீர் என்ற மூன்றும் அமைந்திருப்பதைப்போல மானுட அமைப்பிலே அடிப்படைப் பகுப்பு உடல், உயிர் என்ற இரண்டே எனலாம். அதையொட்டியே மூச்சு உள்ளிட்ட பிற மூன்று அமைந்திருப்பதை அறியலாம். நிலத்தை வானமானது (விசும்பு) ஏந்திக்கொண்டிருக்கிறது; விண் (வெட்டவெளி) என்கிற ஒரு ஆற்றல் இவ்வலகைத் தாங்கிக்கொண்டிருக்கிறது. விண்ணை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுவது காற்று, காற்றை முதன்மையாகக் கொண்டு வெளிப்படும் தீ, தீயைத் தணிக்கும் நீர் என்றவாறு நிலம், வானம், காற்று, தீ, நீர் என்ற ஐந்தும் ஐம்பெரும்பூதம் என்று சங்க காலத்திலேயே தமிழர் உணர்ந்து மொழிந்துள்ளனர்.

சற்று ஆழ்ந்து பார்க்கையில், வானமே முதல் ஆனது. அதிலிருந்தே நிலம் தோன்றுகிறது. என்றாலும், நிலம் என்கிற ஒன்று தோற்றம் பெற்ற பிறகே வான் என்பதை அறிய முடிகிறதல்லவா! இந்த அடிப்படையிலே நிலன் ஏந்திய விசும்பு என்று குறிப்பிட்டிருப்பார் போலும். உடல் வந்த பிறகே உயிரின் தன்மையை அறிதல் போலவும், வெளிச்சம் வந்த பிறகே இருட்டின் நிலை வெளிப்பட்டது போலவுமே இதனைக் கொள்ளலாம்.

### 5. உயிரின் இயங்குமுறை: சங்கச் சான்றுகள்

உயிரின் போக்கைச் சங்கத் தமிழ்ச் சான்றோர் அறிந்து இயம்பியிருப்பது குறிப்பிடத்தக்கதாகிறது. வாழ்க்கை பற்றிய தத்துவத்தை ஒரு பாடலில் செதுக்கிக்கொடுத்த கணியன் பூங்குன்றனார் அவர்கள் உயிர் செல்லும் முறை குறித்துப் புறநானூற்றில் பின்வருமாறு மொழிந்திருக்கிறார்:

*“... மின்னொடு வானம் தண்துளி தலைஇ, ஆனாது கல்பொருது இரங்கும் மல்லல்*
*பேர்யாற்று நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது*
*திறவோர் காட்சியின் தெளிந்தனம்” (புறநானூறு 192.6-11)*

உயிரானது முறைவழியேதான் பயணிக்கும். எவ்வாறெனில், வானத்திலிருந்து குளிர்ந்த நீர்த்துளிகள் மழையாகப் பொழிய, அவை மலைமீது விழுகிறபோது மலைக்கல்லோடு மோதித் தெளித்து, மலை உயரத்திலிருந்து கீழே வருகிறபோது கல்லோடும் மண்ணோடும் திரண்டு பெரிய வெள்ளமாக உருவெடுத்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வேகமாகப் பாயும். அத்தகைய ஆற்றுநீர்ப் பயணத்தில் புணையை (படகு) விடுத்தால் அது எப்படி நீர் செல்லும் வழியே செல்லுமோ, அதுபோல உயிரானது அதற்குரிய முறைவழியிலே செல்லும். அத்தகைய

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.29**

முறைவழியை அறிந்து செயல்படுவதுதான் இக்காலத்திற்கும் அவசியமாகிறது.

### 6. புலனறிவு வளர்ச்சி: ஆறறிவுக் கொள்கை

உயிர்களுக்கான புலன் வளர்ச்சியில் ஐந்து புலன்கள் வரை அமைந்திருப்பதை அறிவோம். ஒவ்வொரு புலன் செயற்பாடும் ஒவ்வொரு அறிவாக அமைகிறது. மொத்தத்தில் ஐந்து புலன் அறிவுகளையும் எந்த நேரத்தில் எப்புலனை எந்த அளவிற்குப் பயன்படுத்தவேண்டும் என்று பகுத்து ஆராய்ந்து அறியும் பகுத்தறிவே மானுடற்கு ஆறாவது அறிவாக அமைகிறது. இக்கொள்கையைத் தொல்காப்பியர் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

*“மக்கள் தாமே ஆறறி வுயிரே பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே”*

*(தொல்காப்பியம், பொருளதிகாரம் 577)*

மேலும், உயிர் அறிவு பற்றியும் உயிரினங்கள் பற்றியும் குறிப்பிடுகையில், தொல்காப்பியர் பின்வருமாறு விளக்குகிறார்:

*“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே இரண்டறி வதுவே அதனோடு நாவே மூன்றறி*
*வதுவே அவற்றொடு மூக்கே நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே ஐந்தறி*
*வதுவே அவற்றொடு செவியே ஆறறி வதுவே அவற்றொடு மனனே நேரிதின்*
*உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே” (தொல்காப்பியம், பொருளதிகாரம் 571)*

இக்கொள்கையை அட்டவணைப்படுத்திக் காணின், உயிரினங்களின் அறிவுநிலைப் படிநிலை பின்வருமாறு அமைகிறது:

| புலன் | அறிவு எண்ணிக்கை | அறிவு வகைகள் | உயிரின உதாரணம் |
|---|---|---|---|
| மெய் (தொடு) | ஓர் அறிவு | 1. தொடு அறிவு | புல், மரம் |
| வாய் | இரண்டு அறிவு | 1. தொடு, 2. சுவை | நத்தை, முரள் |
| மூக்கு | மூன்று அறிவு | 1. தொடு, 2. சுவை, 3. சுவாசம் | சிதல், எறும்பு |
| கண் | நான்கு அறிவு | 1. தொடு, 2. சுவை, 3. சுவாசம், 4. பார்வை | நண்டு, தும்பி |
| காது | ஐந்து அறிவு | 1-4 மேற்கண்டவை + 5. கேட்டல் | விலங்கு, பறவை |

| புலன் | அறிவு எண்ணிக்கை | அறிவு வகைகள் | உயிரின உதாரணம் |
|---|---|---|---|
| மனம் | ஆறு அறிவு | 1-5 மேற்கண்டவை + 6. பகுத்தறிவு | மக்கள் |

**படம் 2. தொல்காப்பியர் குறிப்பிடும் ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரின அறிவுநிலைப் படிநிலை**

இவ்வாறு தம்காலச் சான்றோர்கள் நெறிப்படுத்தியதைத் தொல்காப்பியர் பதிவு செய்துள்ளமை, உயிரினங்களை அறிவு அடிப்படையில் வகைப்படுத்தும் ஓர் ஆய்வுநோக்கு பண்டைத் தமிழ்ச் சமூகத்திடையே இருந்திருப்பதை உணர்த்துகிறது.

### 7. இயற்கையும் பண்பும்

இயற்கையின் படைப்பே எல்லாமுமாக அமைந்திருப்பதால் மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் இயற்கைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பது அடிப்படையாகிறது. மானுட வாழ்வில் உடல், உயிர் என்ற இரண்டு நிலையிலே உடலுக்கான வளர்ச்சி நிலைகளை நாகரிகம் என்றும், உயிருக்கான வளர்ச்சி நிலைகளைப் பண்பாடு என்றும் வழங்குகிறோம். இக்கருத்தினை முடிநாகராயர் பின்வருமாறு புறநானூற்றில் விளக்குகிறார்:

*"ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப் போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது*
*அகலமும் வலியும், தெறலும், அணியும்" (புறநானூறு 2)*

இப்பாடலடிகளின் அடிப்படையில், ஐம்பெரும்பூதங்களும் மனிதப் பண்புகளும் பின்வருமாறு ஒப்பிடப்படுகின்றன:

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.29




| வ. எண் | பூதங்கள் (பௌதிகங்கள்) | ஒப்புமைப் பண்பு |
|---|---|---|
| 1 | நிலம் | பொறுமை |
| 2 | வான் (விசும்பு) | சூழ்ச்சி (ஆராய்ச்சி/சிந்தனை) |
| 3 | காற்று | வலிமை |
| 4 | தீ | வெற்றி |
| 5 | நீர் | அன்பு |

**படம் 3. ஐம்பெரும்பூதங்களுக்கும் மனிதப் பண்புகளுக்கும் இடையேயான ஒப்புமை**

குழந்தைகளின் எதிர்காலத்திற்காகப் பெற்றோர்கள் அருளுணர்வோடு செயல்படுவதைப்போல மக்களின் வாழ்க்கைத் தேவைக்கும் இயற்கையே பயன்படுகளனாக அமைகிறது. மனிதர்களும் விலங்குகளும் கால்களால்தான் நடக்கின்றனர் என்றாலும், விலங்குகளே கால்நடை என்னும் பெயரைப் பெறுகின்றன. மனிதர்கள் நடக்கக் கால்கள் பயன்பட்டாலும், அவர்கள் கால்போன போக்கில் பயணிக்காது மனம் சொல்லும் வழியில் பயணிக்கத்தக்கவர்கள். மனிதர்களுக்கு மனமே முதன்மையானது என்பதால்தான் அவன் மனதன் - மனிதன் என்று அழைக்கப்படுகிறான்.

ஐம்புலன்கள் பொய்யானவற்றை மெய்போலப் புறத்தே காண்பிக்க முற்பட்டாலும் அந்த

மனதிற்குத் தெரியும் எது சரி, எது தவறு என்று. இயற்கை எல்லோருக்கும் பொதுவாக அமைதல்போல மனிதர்களும் அந்த இயற்கையைச் சூழ்ந்து செயலாற்றினால் எங்கும் நலமே சூழும் எனலாம். நிலத்தைப் போல பொறுமையும், வான் போன்ற சிந்தனையும், காற்று போன்ற வலிமையும், தீ போன்ற வெற்றியும், நீர் போன்ற அன்பும் என்ற பண்புகளோடு செயற்படும்பொழுது நிலைத்த ஆளுமையோடு வெளிப்பட முடியும். இவ்வாறு தமிழ்ச் சான்றோர் வாழ்ந்துள்ளனர் என்பதைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

## 8. புலன் உணர்வும் தனிமனிதப் பொறுப்பும்

மனிதர்கள் தங்களின் இன்பத் துன்பங்களுக்குத் தானே காரணமாகின்றனர் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே கணியன் பூங்குன்றனார் பின்வருமாறு கணித்துச் சொல்லியிருக்கிறார்:

*"தீதும் நன்றும் பிறர்தர வாரா நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" (புறநானூறு 192)*

புலன்களுக்கான தேவைகள் எல்லைக்குட்பட்டவை. எல்லோருக்கும் தேவையானவை இப்பிரபஞ்சத்தில் உள்ளன. அவற்றை உரிய முறைமையில் கண்டு பெற்று உண்டு பயணிக்கலாம். அப்படியிருக்க ஒருவர் தன்னையொத்த பிறரைத் துன்புறுத்துவது ஏன்? தன்னுடைய சோம்பலுக்குப் பிறரைப் பலிகடா ஆக்குவது சரியா? தன்னையொத்த பிறர் தனக்குப் போட்டியாக அமைகின்றனரா? என்றெல்லாம் அனைவரும் சிந்தித்து நல்வழியில் செயலாற்றினால் எப்படியிருக்கும் என்பதை இப்பாடல் நினைவூட்டுகிறது. புலன் உணர்வுக்காகவும் தன் அறியாமைக்காகவும் பிறரை வருத்த நினைத்தால் அது தனக்கான வருத்தத்தை வரவழைக்கும் வழியாகுமல்லவா! எனவே மனிதர்கள் காரண-காரியத் தொடர்போடு, அஃதாவது அறிவியல் பார்வையோடு, இவ்வாழ்க்கையை அணுகுதல் என்பது காலத்தின் தேவையாக உள்ளது.

## 9. நிறைவுரை

இதுகாறும் இயற்கை, உயிர்கள், உடல் வாழ்வு, அறிவு நிலைகள், பண்புகள் என்பன குறித்தெல்லாம் சிந்தித்ததன் அடிப்படை, இப்பிரபஞ்சத்தின் செயல்விளைவுத் தத்துவத்தை அறிதல் வேண்டும் என்பதுதான். இன்றைய நம் வினை நாளைய நம் விதி என்பதை உணர்தல் வேண்டும். தொல்காப்பியமும் புறநானூறும் முன்வைக்கும் ஐம்பெரும்பூதக் கொள்கை, ஆறறிவுக் கொள்கை, பண்பு ஒப்புமை ஆகியன, பண்டைத் தமிழர் இயற்கையையும் மனித வாழ்வையும் காரண-காரிய அடிப்படையில் நோக்கிய அறிவியல் பார்வையை வெளிப்படுத்துகின்றன. செயல்விளைவுத் தத்துவத்தை அறிந்து செயலாற்றி வாழ்ந்தால் அனைவரும் பிணக்குகள் இன்றி இணக்கத்தோடும்

இனிமையோடும் வாழ இயலும் என்பதைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் முடிபாக அமைகிறது.

**மேற்கோள் நூல்கள் (Works Cited)**

[1.] இளம்பூரணம், உரையாசிரியர். தொல்காப்பியம் பொருளதிகாரம். தமிழ்மண் பதிப்பகம், 2003.

[2.] சாமிநாதையர், உ. வே., பதிப்பாசிரியர். புறநானூறு மூலமும் பழைய உரையும். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம், 7ஆம் பதிப்பு, 1971.

[3.] சுப்பிரமணியன், ச. வே. சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும். மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, 2010.

[4.] துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., விளக்கவுரையாசிரியர். புறநானூறு. கழகம், மறுபதிப்பு, செப்டம்பர் 1962.

[5.] வேதாத்திரி மகரிஷி. இறைஞானமும் முழுமைப்பேறும் & உலக சமுதாய வாழ்க்கைநெறி. வேதாத்திரி பதிப்பகம், 2ஆம் பதிப்பு, 2013.

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*